**சாட்சிய வாக்குமூலம்**

## மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், தென்காசி.

## OS.No. 73/2024

dated : 15.04.2025

P.W.1

Name ஆறுமுகம்

சாட்சி மீண்டும் மனுவின்பேரில் அழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.

**குறுக்கு விசாரணை**

நான் குலசேகரமங்கலம் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி தலைமையாசிரியாக பணிபுரிந்து ஓய்வு பெற்று, அரியநாயகிபுரத்தில் குடியிருந்து வருகிறேன். வழக்குரையை படித்து பார்த்து கையெழுத்து போட்டேன். எதிர் வழக்குரை 3 ம் பிரதிவாதி அறிவுரைபடி தயாரிக்கப்பட்டது. அதை நான் படிக்க கேட்டேன். முதல் விசாரணை வாக்குமூலம் எனது அறிவுரைப்படி தயாரிக்கப்பட்டது. அரியநாயகிபுரத்தில் மேல்நிலைப்பள்ளி உள்ளது. அது பதிவுப்பெற்ற சங்கத்தின் மூலம் நிர்வகிக்கப்படுகிறது. அரியநாயகிபுரம் இந்து நாடார் உறவின்முறை கமிட்டி, உயர் துவக்கப்பள்ளிக சங்கம் ஆகும். 1 முதல் 4 பிரதிவாதிகள் அந்த சங்கத்தின் உறுப்பினர்கள். மகமை என்பது பதிவு பெறாத அமைப்பு என்றால் சரிதான். 1 முதல் 4 பிரதிவாதிகளை குலசேகரத்தான் வகையறா என்று அழைப்பார்கள். எஸ்.வி இரத்தினசாமி, எஸ்.கே. பாலமுருகன் ஆகியோரும் குலசேகரத்தான் வகையறாவை சார்ந்தவர்கள். ஆறு வீட்டு வகையறா, பூகார வகையறா, வாத்தியார் வகையறா உள்ளிட்ட 14 வகையறாக்கள் உள்ளன என்றால் சரிதான். மேற்கண்ட வகையறாக்களில் ஒவ்வொரு வகையறாவிற்கு முறையான பிரதிநிதித்துவம் இல்லை என்பது எங்கள் குறை என்றால் சரியல்ல. ஊர் கமிட்டியில் அனைத்து வகையறாவின் பிரதிநிதிகள் உள்ளார்கள் என்றால் சரிதான். ஊர்கமிட்டி என்ற அமைப்பு 2015 ம் ஆண்டு துவங்கப்பட்டது

என்றால் சரியல்ல. ஊர் கமிட்டி எந்த ஆண்டு துவங்கப்பட்டது எனது முதல் விசாரணை வாக்குமூலத்தில் கூறிப்பிட்டு கூறவில்லை என்றால் சரிதான். வழக்குரையில் 2015 ம் ஆண்டு ஊர் கமிட்டி துவங்கப்பட்டதாக கூறப்பட்டுள்ளது என்றால் சரிதான், அது தவறாகும். வழக்குரை ஆவணங்களை படித்து பார்த்தேன். வா.சா.ஆ 2 ஆவணத்தில் 2015 ம் ஆண்டு ஊர்கமிட்டி ஏற்பட்டதாக உள்ளது என்றால் சரிதான், அது காவல் துறையால் மிரட்டி பெறப்பட்டது. நான் மேற்கண்ட விபரத்தை எதிர் வழக்குரையிலோ, முதல் விசாரணை வாக்குமூலத்திலோ கூறவில்லை என்றால் சரிதான். மேற்கண்ட ஆவணத்தில் இரத்தினசாமி, பாலமுருகன் இருவரும் எங்கள் வகையறா சார்பில் கையொப்பம் இட்டுள்ளார்கள் என்றால் சரிதான். 2015, 2016 ஆண்டில் பீஸ் கமிட்டி எதுவும் இல்லை என்றால் சரிதான். 2015, 2016 ம் ஆண்டில் ஊர்கமிட்டி தான் திருவிழாவை நடத்தியது என்றால் சரிதான், எங்கள் தரப்பில் கலந்து கொள்ளவில்லை. நான் அவ்வாறு எதிர் வழக்குரையிலோ, முதல் விசாரணை வாக்குமூலத்திலோ குறிப்பிட்டு கூறவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ. 13, 14 ஆவணங்களின் அடிப்படையில் 2015, 2016 ஆண்டில் தான் ஊர் பிரச்சனை ஏற்பட்டு காவல் துறை மூலம் வழக்கு பதிவு செய்யப்பட்டது என்றால் சரியல்ல. 2015, 2016 ஆண்டிற்கு முன்பு பிரச்சனை ஏற்பட்டதாக நான் தாக்கல் செய்துள்ள எந்த ஆவணங்கள் மூலமாக துலங்காது என்றால் சரியல்ல. பள்ளிக்கூடம் தொடர்பான வழக்குகள் உள்ளது. தாவா கோவில் சம்பந்தமாக 2016 ம் ஆண்டில் தான் அமைதி குழு அமைக்கப்பட்டது என்றால் சரிதான். 3 ம் பிரதிவாதி தான் அதற்கான நடவடிக்கை மேற்கொண்டார் என்றால் சரிதான். 2017, 2018, 2019 ஆகிய காலங்களில் பீஸ் கமிட்டி நடந்ததா என்றால் நடந்தது. 2017 ம் ஆண்டில் வாதி தரப்பில் திருவிழா நடத்தினர் என்றால் சரிதான். பீஸ் கமிட்டிக்கான நடவடிக்கையை 3 ம் பிரதிவாதி தான் முன்னின்று ஏற்பாடு செய்தார் என்றால் அனைத்து கமிட்டினரும் ஏற்பாடு செய்தார்கள். அனைத்து தரப்பினரும் மேற்கொண்ட நடவடிக்கையால் பீஸ் கமிட்டி ஏற்படுத்தப்பட்டது என்று எதிர் வழக்குரையிலோ, முதல் விசாரணை வாக்குமூலத்திலோ,

குறிப்பாக கூறவில்லை என்றால் சரிதான். ஒவ்வொரு ஆண்டின் திருவிழாவின் போதும் 3 ம் பிரதிவாதி தான் வழக்குகள் தாக்கல் செய்வார் என்றால் சரிதான். 2019 க்கு பின்னர் பீஸ் கமிட்டி எதுவும் நடைபெறவில்லை என்றால் சரிதான். ஏனென்றால் நாங்கள் தான் திருவிழா நடத்துகிறோம், சுப்பிரமணியன் சுவாமி கோவில் திருவிழா நடைபெறாமல் இருந்து வந்தது. நாங்கள் இருபிரிவினரும் சமமாக பங்கீட்டு திருவிழாவை நடத்தி வருகிறோம். மேற்கண்ட விபரத்தை நிரூபண வாக்குமூலத்தில் குறிப்பிட்டு கூறவில்லை என்றால் சரிதான். 2019 க்கு பின்னர் 3 வது பிரதிவாதி திருவிழா நடத்துவது சம்பந்தமாக நீதிபேராணை வழக்கு தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

BALUCHAMY RAJAVEL

Digitally signed by BALUCHAMY RAJAVEL
Date: 2025.04.15 18:16:31 +0530